செய்தி வெளியீடு எண் :01 நாள் :01.05.2018

***தேனி மாவட்டம்,***
***தேனி ஊராட்சி ஒன்றியம், அம்பாசமுத்திரம் ஊராட்சியில்***
***தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றார்.***

******

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்பாசமுத்திரம் ஊராட்சியில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று (01.05.2018) நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று பேசியதாவது, தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறது. கிராமசபைக் கூட்டத்தின் நோக்கம் மக்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை பூர்த்தி செய்வதற்கும், ஒரு கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை கண்டறிந்து பொதுமக்களின் முன்னிலையில் விவாதித்து மக்களின் முழு ஆதரவோடு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி, அதன்மூலம் அரசின் பணிகளை மேற்கொள்ளுவதாகும்.. அம்பாசமுத்திரம் ஊராட்சி சிறந்த ஊராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் சிறந்த ஊராட்சிக்கான பரிசு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பொதுமக்களின் கூட்டு முயற்சியின் மூலமே சுத்தமான, சுகாதாரமான மற்றும் ஊராட்சி சிறந்த ஊராட்சியாக மாற்ற முடியும். பொதுமக்கள் தங்களது குடியிருப்புகளில் உருவாகும் குப்பைகளை தெருக்களில் கொட்டாமல் வீட்டிலேயே தரம் பிரித்து தூய்மை காவலர்களிடம் வழங்கிட வேண்டும்.

திறந்த வெளியில் மலம் கழிக்காமல், தனி நபர் கழிப்பறை அல்லது பொது கழிப்பறையினை பயன்படுத்திட வேண்டும். சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒரு கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, பொது ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்து வருகிறது. பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இட வசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை உருவாக்கிட ரூ.12,000/- அரசு மானியம் வழங்கி வருகிறது. பொதுமக்கள் திறந்த வெளிகளை பயன்படுத்தாமல் இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். சுய உதவிக்குழுவினர்கள் தங்களது கிராமத்தை சுகாதாரமான கிராமமாக உருவாக்கிட திட்டமிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். கோடைகாலம் என்பதால் பொதுமக்கள் நீரின் அருமை கருதி சிக்கனமாக பயன்படுத்திட வேண்டும்.

தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் பொதுமக்களை சென்றடைந்துள்ளதா என்பதனை கிராமசபை கூட்டங்களின் மூலமே அறிய முடியும். தமிழக அரசு கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள், இளைஞர்கள், ஆதரவற்றவர்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகள், ஆகியோரிகளின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் மகளிர் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தாட்கோ, மாவட்ட தொழில் மையத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் தொழில் தொடங்கிட எண்ணற்ற பல்வேறு பயிற்சியளிக்கப்பட்டு அவர்களின் வாழ்வை மேன்மையடையச் செய்து வருவதோடு, தொழில் தொடங்கிட அரசு மானியத்துடன் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு பின்னர், அம்பாசமுத்திரம் ஊராட்சியில் முதலமைச்சரின் சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடு கட்டுமானப்பணி, புதியதாக கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையம், செயல் பட்டு வரும் நூலகம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செயல்பாடுகள், மண்புழு தயாரிக்கும் உரக்கூடத்தின் செயல்பாடுகள், கழிவு நீர் வாய்க்கால் மற்றும் கழிப்பறை பயன்பாடுகள் குறித்து வீதி, வீதியாக சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிராமசபைக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பா.திலகவதி அவர்கள், செயற்பொறியாளர் செல்வி கவிதா அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.அபிதாஹனீப் அவர்கள், வட்டாட்சியர் திருமதி சத்தியபாமா அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கோவிந்தராஜ் அவர்கள், திருமதி மலர்விழி அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி**